# இயல் 6.11 - சுற்றளவு மற்றும் பரப்பளவு

பயிற்சி எண் :: 6.11.2.1.C


பரப்பளவு - வடிவங்களின் பரப்பளவு - பயிற்சி

## பரப்பளவு - வடிவங்களின் பரப்பளவு - பயிற்சி

பூபாலன் அவன் படிக்கும் அரசுப்பள்ளியின் மாணவர் தலைவன். அவனுடைய பள்ளியில் மாணவர்களும் மாணவியரும் சம விகிதத்தில் படிக்கிறார்கள். அவர்கள் பள்ளியில் தினமும் காலையில் வகுப்புகள் துவங்குமுன் எல்லா மாணவர்களும் செவ்வக வடிவில் அமைந்துள்ள பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடிநின்று தமிழ்த்தாய் வாழ்த்துப் படுவது வழக்கம். அன்று, அவ்வாறு செய்கையில் தலைமை ஆசிரியர் பூபாலனைக்கூப்பிட்டு கீழ்காணும் வினாக்களுக்கு விடை சேகரித்துவருமாறு பணித்தார்.

1. எல்லா மாணக்கர்களும் சரியாக 1 மீட்டர் இடைவெளிவிட்டு நிற்கின்றனரா?
2. காலை பதிவேட்டிற்கு வந்துள்ள மொத்த மாணவர்கள், மாணவியர் மற்றும் மாணாக்கர்கள் எத்தனை பேர்?
3. அவர்கள் எத்தனை நெடுவரிசையிலும் எத்தனை குறுக்கு வரிசையிலும் அணிவகுத்து நிற்கின்றனர்?
4. மைதானத்தில் மாணாக்கர்கள் நிற்கும் பரப்பளவு எவ்வளவு? அதில் மாணவர்கள் நிற்கும் பரப்பளவு எவ்வளவு? மாணவியர் நிற்கும் பரப்பளவு எவ்வளவு?
5. மாணவர்கள் நிற்கும் பரப்பளவிற்கும் மாணவியர் நிற்கும் பரப்பளவிற்கும் இடையில் உள்ள விகிதம் என்ன?

உங்களால் பூபாலனுக்கு உதவி செய்ய இயலுமா?




 - மாணவன்

 - மாணவி

1. எல்லா மாணக்கர்களும் சரியாக 1 மீட்டர் இடைவெளிவிட்டு நிற்கின்றனர். கொடுக்கப்பட்டுள்ள விளக்கப்படத்திலிருந்து இது மிகத்தெளிவாகத்தெரிகிறது.
2. காலை பதிவேட்டிற்கு வந்துள்ள மொத்த மாணவர்கள் 50 பேர். மொத்த மாணவியர் 58 பேர். மொத்த மாணாக்கர்கள் 108 பேர்.
3. அவர்கள் 18 நெடுவரிசையிலும் 6 குறுக்கு வரிசையிலும் அணிவகுத்து நிற்கின்றனர்?
4. ஒவ்வொரு மாணாக்கரும் ஒவ்வொரு சதுர மீட்டரில் 1 மீட்டர் இடைவெளி விட்டு நிற்கின்றனர். மொத்தம் 108 மாணாக்கர்கள் காலை பதிவேட்டில் நிற்கின்றனர். எனவே, அவர்கள் நிற்கும் மொத்தப் பரப்பளவு 108 சதுர மீட்டர்கள் ஆகும். அதில் மாணவர்கள் நிற்கும் பரப்பளவு 50 சதுர மீட்டர். மாணவியர் நிற்கும் பரப்பளவு 58 சதுர மீட்டர்.
5. மாணவர்கள் நிற்கும் பரப்பளவிற்கும் மாணவியர் நிற்கும் பரப்பளவிற்கும் இடையில் உள்ள விகிதம் 50:58 அதாவது 25:29.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 15th April, 2022 :: 19:31 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**